<u>காவல்துறை, புதுச்சேரி</u>

தேதி 18/8/2011

கடந்த 4/8/2011 அன்று சுமார் 20.45 மணிமுதல் 21.00 வரைக்குள் இரண்டு பெண்கள் வாடிக்கையாளர்களாக அண்ணா சாலையில் உள்ள சாம்சங் எலக்டாரிக் கடையில் சுமார் 50,000/- மதிப்புள்ள இரண்டு மடிகணினிகளை (1 பெரியது மற்றும் 1 சிறியது) திருடிச்சென்றனர். புகார்தாரர் திரு. சிராஜுன் த/பெ அப்துல் கபூர் மடிகணினி திருடிபோனது அந்த பெண்கள் அங்கிருந்து சென்றபிறகே தெரியவந்தது. இது சம்மந்மாக பெரியக்கடை காவல் நிலையத்தில் குற்ற எண் 292/2011 ர.எ 380 ச.ற 34 இ.த.ச வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. காவல் கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு ரோந்து வாகனங்கள் மூலம் அந்த பெண்களை தேடினார்கள் ஆனால் அவர்களை கண்டுபிடிக்கமுடியவில்லை. நேற்று (17/8/2011) அதே பெண்கள் மற்றும் ஒரு பெண்ணுடன் நேரு வீதியில் உள்ள சோனி கடைக்க வந்து விலைஉயர்ந்த கைபேசியை கேட்டுள்ளனர். சந்தேகம் அடைந்து கடையில் மேனேஜர் திரு. டேவிட் பெரியக்கடை காவல் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் சோனி கடைக்கு விரைந்த காவல்துறை அங்கிருந்த மூன்று நபர்களையும் விசாரணை செய்தனர். இந்த புகாரின் அடிப்படையில் பெரியக்கடை காவல் நிலையத்தில் குற்ற எண் 308 ர.எ 380இ 511இ இ.த.ச. ச.ற 34 இ.த.ச வழக்கு பதிவி செய்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணையில் பெண் குற்றவாளிகள் 1) சித்ரா " இந்துமதி (38) க/பெ இளங்கோ, மாரியம்மன் கோவில் வீதி, கம்மன்பேட்டை, வண்டிப்பாளையம், கடலூர், 2) சிவகாமி " அபிராமி (30) க/பெ வேல்முருகன் மாரியம்மன் கோவில் வீதி, கம்மன்பேட்டை, வண்டிப்பாளையம், கடலூர் மற்றும் 3) சாந்தி (45) க/பெ கணேசன், கம்மன்பேட்டை, மஞ்சகுப்பம், கடலூர் என்பது தெரியவந்தது. மேலும் அவர்கள் தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தனர். அதில் அண்ணா சாலையில் உள்ள சாம்சங் எலக்டாரிக் கடையில் மடிகணினியை திருடியதை ஒப்புக்கொண்டனர். ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் இரண்டு மடிகணினியும் பறிமுதல் செய்யப்பட்டது. இந்த மூன்று பெண் குற்றவாளிகளும் கனம் முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் முன்பு ஆஜர்படுத்தப்பட உள்ளனர். மேறக்கொண்டு விசாரனை நடைபெற்றுவருகின்றது.

கடந்த 18/8/2011 அன்று அதிகாலை 3 மணிக்கு காவல் நிலைய அதிகாரி-II திரு. ரகுபதி அவர்கள் ரோந்து சென்றபோது ஒரு இருசக்கர வாகனத்துடன் சந்தேகத்திற்கிடமான நின்றுஇருந்த இரண்டு நபர்கள் கைது செய்தார். அவர்களை விசாரனை செய்தததில் அவர்களின் பெயர்கள் 1) துரை (34) த/பெ மணி, எண் 59 மாரியம்மன் கோவில் வீதி, பூமியான்பேட்டை, புதுச்சேரி, 2) பாஸ்கர் " மரியஉத்திரநாதன் (29) த/பெ மரிய ஜேசப் எண் 4 ஊ பிளாக், புது குடியுருப்பு, வாஸார் கோவில் வீதி திப்புராயபேட்டை என்பது தெரியவந்தது. இது சம்மந்தமாக பெரியக்கடை காவல் நிலையத்தில் குற்ற எண் 309.2011 ர.எ 41(ஊை) ன, 102 ஊச,ஊ வழக்கு பதிப்பட்டது. வழக்கின் விசாரணையில் குற்றவாளிகள் தாமாக முன்வந்து ஒப்புகல் வாக்குமூலம் அளித்தனர். அதில் மேலும் 12 இரு சக்கர வாகனங்களை திருடிஇருப்பது தெரியவந்தது. எனவே வழக்கின் பிரிவை 41(ஊை) ஙஇ 102 ஊச,ஊ வடி 379 ச.ற 34 ஜீஊ விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. திருடப்பட்ட 13 இரு சக்கர வண்டிகளில் 9 வண்டிகள் பெரியக்கடை காவல் நிலையத்திற்கு உட்பட்டது, 1 வண்டி விதம் ஓர்லையன்பேட்டை, லாஸ்பேட்டை, ஒதியஞ்சாலை மற்றும் ரெட்டியார்பாளைய காவல் நிலையத்தில் சார்ந்தது. 13 இரு சக்கர வண்டிகளும் பறிமுதல் செய்யப்பட்டு மேற்கொண்டு விசாரணை நடைப்பெற்று வருகின்றது.